# தமிழ் இலக்கியங்களில் தூதுப் பொருண்மை

**ச. வித்யா**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*ராணி மேரி கல்லூரி, வேலூர்*

சங்க கால மக்களின் வாழ்விலும் மன்னர்களின் அரசியல் வாழ்விலும் தூது மிக முக்கிய இடம் வகித்துள்ளது. இலக்கியங்களிலும் இடம்பிடித்தது. சங்கப் பாடல்களில் சிறு கூறாகத் தோன்றிய தூது, காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் அடியெடுத்து வைத்தாலும் பதினான்காம் நூற்றாண்டில் தனி இலக்கிய வகையாகக் காலூன்றியது.

சங்கக் கால வாழ்க்கை முறையில் செய்திகள் முரசறைந்து அறிவிக்கப்பட்டாலும், தகவல் தொடர்புச் சாதனமாக அஃறிணைப் பொருள்களை நம்பி இருக்க வேண்டியச் சூழல் அக்காலத்தில் நிலவிற்று. அன்றாட செய்தியாயினும் அரசாங்கச் செய்தியாயினும் புறாக்கள் மூலமாகவோ தூதுவர்கள் மூலமாகவோ தெரிவித்தனர். இவ்வாறு தகவல் தொடர்பாகப் பயனளித்தது மட்டுமல்லாது ஒருவரது கருத்தை இன்னொருவருக்குத் தெரிவித்தலின் மூலம் நட்பை உருவாக்கல், பகைமையைத் தவிர்த்தல் எனத் தூதுமுறை பெரும் பயன்களைக் கொண்டதாக விளங்கியது. தான் சார்ந்த சமூகத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியமும் சமூகத்தின் முக்கிய பங்காக விளங்கிய தூதினை இலக்கியக் கூறுகளுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டது. அகவுணர்வுகளுக்கு மிகுந்த மதிப்பளிக்கும் தமிழிலக்கியம் தலைவன், தலைவியின் உணர்வினை அவர்கள் இருவரன்றி பிறர் அறிதல் நாகரிகமன்று எனப் பேசாதன மற்றும் உயிரற்றப் பொருள்களைத் தூதாக அனுப்பும் தூது இலக்கியத்தை உள்ளடக்கியதாக விளங்குகிறது.

### அகத்தூது

ஒத்த இயல்புடைய தலைவனும், தலைவியும் தங்களின் உள்ளத்து உணர்வுகளை ஒருவருக்கொருவர் அறிந்துக் கொள்ள அகத்தூது துணைப்புரிகிறது.

### வாயில்கள்

தலைவன் தலைவியிடையே தூதுச் செல்வோரைத் தொல்காப்பியர் வாயில்கள் எனக் கூறுகிறார். வாயில்களாக அமைவோர்,

**தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாடினி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவோர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**[1]

தலைவன், தலைவியின் இடையே தூதுச் சென்று ஒருவருக்கொருவர் உணர வகை செய்தனர் என அறிய முடிகிறது. இவ்வாயில்களுள் விறலியைத் தவிர பிற வாயில்களாக உள்ளோர் தாமாகத் தூதுச் சென்றனரே அன்றி தலைவன் தலைவியால் அனுப்பப்படவில்லை. தூது இலக்கியங்களில் தூதுப் பொருளிடம் தூதுச் சென்று வருமாறு தலைவனோ தலைவியோ வேண்டுவதாக அமைக்கப்பட்டுள்ளன.

### புறத்தூது

பாலைத் திணையின் உரிப் பொருளானப் பிரிவு நிகழும் இடங்களைப் பற்றிக் கூறும்பொழுது,

**ஓதல் பகையே தூதிவை பிரிவே**[2]

எனத் தூது பற்றி கூறுகின்கிறார். தலைவன், தலைவி பிரிவு, ஓதல் காரணமாகவோ பகைமேலோ, பகைவரைச் சந்து செய்விக்கவோ நிகழும் என்று தொல்காப்பியர் கூறுகிறார். பாலைத்திணை அகத்திணையாயினும் தூதுப்பிரிவு, அரசியல் காரணமாக அமைந்திருப்பதனால் இப்பிரிவு புறத்தூதாக அமைகிறது. அரசனுக்கு நாட்டாட்சியில் அமைச்சன் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு தூதனும் இன்றியமையாதவனாவான்.

**தூதுவன் - ஒற்றன்**

தூதுவர் எனப்படுபவர் அரசருக்காக நேரடியாக இயல்பான உருவுடன் வேற்றரசரும் மதிப்பளிக்கும் வகையில் செயல்படுபவர். மேலும் இவர் வெளிநாட்டு தொடர்பு அதிகாரியாகவும் கருதப்பட்டார். சந்தேகப்படாத மாற்று உருவுடன், பார்த்தவர்க்கு அஞ்சாமல், அறிந்ததை யார்க்கும் வெளிப்படுத்தாமல் இருப்பவனே ஒற்றன். அவன் சுற்றத்தார், பகைவர் என அனைவரையும் சொல், செயல்களால் ஆராய்பவனாகவும் இருக்க வேண்டும். மாற்றரசரால் ஒற்றரென அறியப்பட்டால் கொல்லப்படுவர். இவர்கள் தம் நாட்டாரையும் கண்காணிப்பர். அதனால் உள்நாட்டுச் சார்பு பணியாளராகக் கருதப்பட்டார். இவ்வாறு தூதரும் ஒற்றரும் வேறு வேறானவராகக் கூறப்பட்டிருப்பினும் பின்னாளில் கந்தப்புராணம் போன்ற இலக்கியங்களில் ஒன்றாகக் கையாளப்பட்டுள்ளனர். வீரவாகு தன்னைப் பற்றி கூறுகையில்,

**தூதும் ஆகுவன் அமைச்சனும் ஆகுவன் துன்னார்**
**மீது வெஞ்சமர் ஆற்றுவன் இன்னமும் வேலோன்**
**ஓதிடும் பணி யாவையும் செய்குவன் உலகில்**
**ஏதும் வல்லன் யான் வேண்டும் போர் புரிதியால் என்றான்**[3]

தூதன், அமைச்சன், படைத் தளபதி என எதையும் தான் வேலனுக்காக செய்யக் கூடியவன் என்று கூறிக்கொள்வதன் மூலம் தூதனுக்கான இலக்கணத்தை உரைக்கிறார்.

**சங்க இலக்கியங்களில் தூது**

தனி இலக்கிய வகையாக தூது உருவெடுக்கும் முன் சங்க இலக்கியம் முதலே களவில் தலைவனுக்குப் பாங்கனும் தலைவிக்குப் பாங்கியும் வாயில்களாக அமையும் விதத்தினைக் காண முடிகிறது.

**காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை**
**துறைகெழு கொண்கன் பிரிந்தென**
**இறைகே ழெல்வளை நீங்கிய நிலையே**[4]

எனக் காமம் மிக்க கழிபடர்க் கிளவி, நெஞ்சோடு கிளத்தல் நிலையிலிருந்து தன் நிலையைக் கூறும் தூதாக வளர்ச்சி அடைந்துள்ளதை அறிய முடிகிறது. அகப் பொருள் செய்திகள் மட்டுமல்லாமல் புறப் பொருள் செய்திகளையும் தூதாகவிடுக்கும் வழக்கம் சங்க இலக்கியங்களில் காணலாம். புறநானூற்றுப் பாடல் ஒன்றில்,

**இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,**
**காண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து**
**கடியுடை வியல் நகர் அவ்வே; அவ்வே**
**பகைவர்க் குத்தி, கோடு நுதி சிதைந்து,**
**கொல்துறைக் குற்றில்மாதோ - என்றும்**
**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**[5]

என்று அதியமான், முதல் பெண் தூதுவரான ஔவையாரை தொண்டைமானிடம் தூது அனுப்பியமையும், ஔவையார் தன் மதிநுட்பத்தால் வென்றமையும் அறிகிறோம். அரசர், அந்தணர் தூதுக்குரியோர் என்ற நிலை மாறிப் பெண்பாலரும் அரசியல் தூதுச் சென்றுள்ளனர் என்பதற்குச் சான்றாய் இப்பாடல் விளங்குகிறது.

**திருக்குறள் கூறும் தூது**

தூது இலக்கியத் தோற்றத்திற்கான அடுத்த படிநிலையைப் பதினெண்கீழ்கணக்கு இலக்கியங்களில் காண முடிகிறது. திருக்குறள் 'தூது' என்னும் தனி அதிகாரத்தினையே பெற்று விளங்குகிறது.

**தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்**
**வாய்மை வழியுரைப்பான் பண்பு**[6]

எனத் திருவள்ளுவர் தூதர்க்கு வேண்டிய மூன்று பண்புகளாக, தூய்மை, தவறியும் குற்றமானச் சொற்களைக் கூறாது இருத்தல், தன் உயிருக்கு அஞ்சாதிருத்தல் என்று அரசியல் தூதுக்குரிய இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

**அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை**[7]

என்று பொழுது கண்டு இரங்கல் என்னும் அதிகாரத்திலும் வள்ளுவர் தூது பற்றிய செய்திகளைக் கூறியுள்ளார்.

**காப்பியங்கள் கூறும் அகத்தூது**

காப்பியங்களில் தூதுவர்கள், தூதுப் பற்றியச் செய்திகள் அதிகம் காணப்படுவதை அறியலாம். அரசர்கள் சிறப்பாக ஆட்சிபுரிய அவர்களுக்கு ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் துணை நின்றன எனும் செய்தி சிலப்பதிகாரம், மணிமேகலையில் கூறப்பட்டுள்ளன.

காப்பியங்கள் அகத்தூது, புறத்தூது ஆகிய இருவகை தூதுக்களையும் கூறுகின்றன. கம்பராமாயணத்தில் இராமன், தன்னைப் பிரிந்து இலங்கையில் வாடிய சீதையிடம் அனுமனைத் தூது அனுப்பிய போது, அங்குச் சென்ற அனுமன்,

**அன்னவற்கு அடிமை செய்வேன், நாமமும் அனுமன் என்பேன்**
**நல்நுதல் தன்னைத் தேடி நால் பெரும் திசையும் போந்த**
**மன்னரில், தன்பால் வந்த தானைக்கு மன்னன், வாலி**
**தன் மகன், அவன்தன் தூதன், வந்தனென் தனியேன்' என்றான்**[8]

எனச் சீதையிடம் தன்னைத் தூதன் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் வகையில் பணிந்துரைக்கின்றான்.

**பக்தி இலக்கியங்களில் தூது**

பக்தி இலக்கியத்தில் இறைவனைத் தலைவனாகவும் தம்மை தலைவியாகவும் கொண்டு நாயக - நாயகி பாவத்தில் பாடிய அகத்துறை பாடல்கள் தூதிற்கு இடமளித்தன. இவை 'கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயத்த பக்கத்தின்' பாற்படும். இறைவன் மீது எல்லையற்ற அன்பு கொண்டத் தலைவி தன் துயரைக் கூறி தூதுவிடுவதாக அமைந்த பாடல்கள் தூது இலக்கியத் தோற்றத்திற்குப் பேருதவியாக அமைந்தவையாகும். திருநாவுக்கரசரும் தேவாரத்தில் தலைவி குயில், குருகு, வண்டு, நாரை, பூவை ஆகியவற்றை இறைவனிடத்தில் தூதுவிடுவதாகப் பாடியுள்ளார்.

**ஓது பைங்கிளிக்கு ஒண்பால் அமுது ஊட்டி,**
**பாதுகாத்துப் பலபல கற்பித்து**
**மாதுதான் மருகல் பெருமானுக்குத்**
**தூது சொல்ல விடத்தான் தொடங்குமேய**[9]

தலைவி, கிளியினைத் தூதுவிடும் இப்பாடல் தூதுச் செய்தியுடன் அமைந்திருப்பதைக் காணலாம். சிற்றிலக்கியங்களில் தூது சந்தப் பாடலான திருக்குற்றாலக் குறவஞ்சியில் தூதுக் கூறும்படி திரும்ப திரும்பச் சொல்லும் பாடல்,

**வந்தால் இந்நேரம் வரச்சொல்லு வாராதிருந்தால்**
**மாலை யாகிலும் தரச் சொல்லு, குற்றாலநாதர்**
**தந்தால் என்நெஞ்சைத் தரச்சொல்லு, தாராதிருந்தால்**
**தான் பெண்ணாகிய பெண்ணை நான்விடேன்**[10]

இவ்வாறு தூதுக் கூற வேண்டுவதோடு மாலை வாங்கி வரச் சொல்லும் தூதுக்குரிய முதன்மைச் செய்தியும் இப்பாலில் இடம்பெற்றுள்ளது.

**நாட்டுப் புறப் பாடல்களில் தூது**

பாடியவர் இன்னார் என அறியப்படாத, மக்கள் தங்கள் வேலையின் ஊடே பாடும் நாட்டுப் புறப் பாடல்களிலும் தூதுப் பாடல்கள் காணப்படுகின்றன. தலைவி கிளி, பறவைகள், குயில், காகம், புறா ஆகியவற்றைத் தலைவனிடம் தூதாகவிடுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

**பச்சைக் கிளியே பறந்து செல்லும் பட்சிகளே**
**இச்சையுள்ள மச்சானுக்கு எந்தன் துயர் கூறிவிடு**[11]

என்று கிளியினை ஒரு பெண் தூதுவிடுகிறாள்.

**திரையிசைப் பாடல்களில் தூது**

இக்கால இலக்கியங்களானத் திரையிசைப் பாடல்களும் தூதுக் கூறுகளை உள்ளடக்கியவைகளாகத் திகழ்கின்றன.

**தூதுச் செல்ல ஒரு தோழி இல்லை எனத்**
**துயர் கொண்டாளோ தலைவி**[12]

எனக் கவிஞர் கண்ணதாசன் தன் காதலைத் தூது அனுப்ப தோழியைத் தேடும் தலைவியை நம் கண் முன் நிறுத்துகிறார். மேலும்,

**தூது வருமா தூது வருமா**
**காற்றில் வருமா கரைந்துவிடுமா**[13]

எனக் கவிஞர் தாமரை தலைவி தலைவனிடமிருந்துக் காதல் செய்தித் தூதாக வராதா என ஏங்குவதாகப் பாடியுள்ளார். இவ்வாறு பல பாடல்களில் நம் கவிஞர்கள் தூதுக் கூற்றினைப் பதிவு செய்துள்ளனர். இன்றையச் சூழலில் உலக அளவில் நாடுகளுக்கிடையே நட்பையும் உறவையும் வலுபடுத்தும் பாலங்களாக ஒவ்வொரு நாட்டினிலும் தூதரகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி உலகை நம் விரல் நுனியில் கொண்டு சேர்க்கும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, மின்னஞ்சல், ஒலிப் பேழை என உலகளவில் ஊடகங்களின் வழி இன்றைய தூது நிலவுகிறது. இவ்வாறு தகவல் தொடர்பாக மட்டுமின்றி தற்கால இலக்கியமாகவும் திகழும் தூதிலக்கியம் சமகால வரலாற்றையும் அரசியல், சமுதாயச் செய்திகளையும் கொண்டு விளங்கும் இலக்கியப் பெட்டகமாக விளங்குகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், இளம்பூரணர்(உ.ஆ.), பொருளதிகாரம், கற்பு, நூ.52.
2. மேலது, அகத்திணை, நூ.27.
3. கச்சியப்ப சிவாச்சாரியார், கந்தப்புராணம், , உத்த காண்டம், யுத்தப் படலம், பா.5531
4. டாக்டர் உ.வே.சா. (உ.ஆ) ஐங்குறுநூறு, பா.140
5. ந.சேதுரகுநாதன் (உ.ஆ) புறநானூறு, பா.95.
6. திருக்குறள், குறள், 688.
7. மேலது, 1228.
8. கம்பர், கம்பராமாயணம், சுந்தரகாண்டம்,பிணிவீட்டுப்படலம், பா.82.
9. திருநாவுக்கரசர், தேவாரம், 5 - 84 - பா. 4.
10. திரிக்கூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பா.34.
11. பாலசுந்தரம் இ., ஈழத்து நாட்டார் பாடல்கள், ப.415
12. கண்ணதாசன் பாடல், பச்சை விளக்கு.
13. தாமரை பாடல், காக்க காக்க.